Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 2 ★ மட்டக்களப்பு ★ 1970 - ஆவணி ★ விலை 25 ★ இதழ் 7

# விண்ணோரின் அரசி
# மண்ணோரின் நம்பிக்கை

இம்மாதம் 15ந் திகதி நாம் புனித கன்னிமரியின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடப் போகிறோம். இற்றைக்கு ஏறக்குறைய 20 ஆண்டுகட்குமுன் பரிசுத்த தந்தை 12ம் பத்திநாதர், இறைவனின் அன்னையாகிய அமல உற்பவக் கன்னிமரி தனது மண்ணுலக வாழ்வை முடித்தபின் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துச் செல்லப்பெற்றாள் என்ற பரம்பரைக் கொள்கையை விசுவாசத்திற்குரிய ஒரு மறை உண்மையாக உறுதிப்படுத்தினார். புனித கன்னிமரியைக் குறித்து திருச்சபை கொண்டாடிவரும் திருவிழாக்களுள் முதன்மை



யானதும், மிகத் தொன்மை வாய்ந்ததுமாக விளங்குவது அவளது விண்ணேற்புத் திருவிழாவே. அதைத் திருச்சபை பன்னெடுங் காலமாய் ஒரு பெருவிழாவாகக் கொண்டாடி வருகின்றது.

அமலோற்ப அன்னையின் விண்ணேற்பை விசுவாசத்திற்குரிய ஒரு மறை உண்மையாக உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து 12ம் பத்திநாதர் **அனைத்துலக அரசியின் திருவிழாவை** ஏற்படுத்தி, கன்னிமரி, அனைத்துலக அரசியாகவும் இறைவனால் உயர்த்தப் பெற்றுள்ளாள் என்ற உண்மையையும் உறுதிப்படுத்தினார். ''அரசர்க்கெல்லாம்

[3ம் பக்கம் பார்க்கவும்]

**"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## 17. கல்வாரி காண்போம்

ஜோண் எனது அருமை நண்பன் இருபத்தேழு வயது. இரு பிள்ளைகட்குத் தந்தை. ஆறு வருடம் அரசாங்க சேவையில் நம்பிக்கையான ஊழியன். ஒரு நாள் மாலை வழமை போல் அவனைச் சந்தித்தேன். வழக்கமாய் மலர்ந்த முகத்துடன் காட்சியளிப்பவன் இன்று அவன் முகத்தில் மகிழ்ச்சியில்லை. காரணம் கேட்டேன். அலுவலகத்தில் ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது. சிறிது, பெரிதாகி வேலைக்கே உலை வைக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது. என்ன செய்யலாம்?

உதவி செய்யக்கூடிய ஒருவரைச் சிபார்சு செய்தேன். அவ்வளவுதான் என்னால் செய்ய முடிந்தது. ஒரு கிழமைக்குள் ஏதோ செய்து விடவேண்டும். தவறினால்..........?

அவனும் தாமதிக்கவில்லை. உடனே அங்கு போனான். அவ்வளவு ஆத்திரம். அங்கும் அவனைப்பேரிடி காத்திருந்தது. பெரியவர் வீட்டில் மக்கள் நடமாட்டம் அதிகமாயிருந்தது. சந்தேகத்துடன் உட்சென்று விசாரித்தான். மகனுக்குக் கடுமையான வருத்தம் எந்த வைத்தியரிடம் எடுத்துச்செல்வது என்று அங்குள்ளவர்களுடன் ஆலோசித்துக்கொண்டிருந்தார் பெரியவர். நண்பன் திரும்பி வந்துவிட்டான். காலையிற்சென்று பார்த்தான் முன்னிலும் பெரிய ஏமாற்றம். மகன் மரணித்து விட்டான். எப்படி உதவி கேட்பது.

மூன்று நாள் கழித்துச்சென்றான். தன் நிலையை விளக்கி மன்றாடினான். உரிய உதவியும் கிடைத்தது. தலைதப்பினான்.

வாருங்கள் கல்வாரிக்குச் செல்வோம். சற்றுக்கண்களை மூடிக்கொண்டு பிற எண்ணங்களை ஒதுக்கிவிட்டு என்னுடன் வாருங்கள். அதோ தெரிகிறது ஒரு குன்று. கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான மலை. அதோ தொலையில் மூன்று சிலுவைகள் காட்சியளிக்கின்றன. தயங்காமல் வாருங்கள் நெருங்கிப் பார்ப்போம். ஆகா என்ன கொடுமையான காட்சி. நடுவில் நம் யேசு குற்றுயிராய்த் தொங்கிக்கொண்டிருக்கிறார். இடையிடையே தலை அசைகிறது. பக்கத்திலுள்ள இரு சிலுவைகளிலும் இருவர் தொங்குகின்றனர் அவர்களும் ஏதேதோ சொல்கின்றனர்.

இப்பக்கம் திரும்புங்கள் திருமகனை ஈன்ற திருத்தாயின் நிலையைப்பாருங்கள் தனயனின் துயரைத்துடைக்க தம்மால் முடியவில்லையே, சிறிது நேரத்தால் உயிர் பிரியப்போகிறதே, என்ன செய்வேன் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறாள். அழுது அழுது அவர் திருமுகமே உருக்குலைந்துவிட்டது. பக்கத்தில் மரியமதலேனும், புனித அருளப்பரும் அன்னைக்கு ஆறுதலளிக்க முயல்கிறார்கள். பெற்றவளுக்கல்லவா பிள்ளையின் அருமை தெரியும்.

அதோ பாருங்கள் நான்கு வீரர்களை அநாயாசமாயிருந்துகொண்டு அருட்திரு மகனின் தையலற்ற திருவாடைக்குத் துண்டு போடுகிறார்கள் அவ்வுடைக்கும் ஒரு போட்டி. ...க்காட்சிகளையும் கண்டுகொண்டீர்களல்

### பொ. இராமலிங்கம்

லவா? வாருங்கள் திருவன்னையிடம் செல்வோம். முழங்காலிடுங்கள் தொடங்குங்கள் ''அருள் நிறைந்த மரியாயே வாழ்க............ அர்ச்சியசிஷ்ட மரியாயே................'' அன்னையிருக்கும் அவலநிலையென்ன? அவள் மனம் புண்பட்டு என்ன வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறது; அந்நிலையில் நாம் அவளுடன் பேச, எதையும் கேட்கப்போகலாமா? நமது வாழ்த்தும் வேண்டுதலும் அவள் மனதில் செல்லுமா?

திருப்பலி ஒப்புக்கொடுப்போம். வாருங்கள். கல்வாரியில் நாம் கண்ட அதே காட்சிதான் இங்கும் நம் கோயிலுள் பீடத்தில் நிகழ்கிறது இறைமகன் தம் மனுவுடலில் அன்று தம் தந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். இன்று மறையுடலில் ஒப்புக்கொடுக்கிறார் திரு அன்னையின் நிலையும் அன்றைய நிலைதான். இவ்வேளையும் நாம் பலி ஒப்புக்கொடுக்க வந்தோம். யேசுவோடு ஒன்றுபட்டு நம்மையும் பலியாக ஒப்புக்கொடுக்கும் அதே வேளை பலி ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கும் அன்னையிடம் ''அருள் நிறை மரியாயே............'' என்றால் அது பொருந்துமா? அன்னையுடன்

[3ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**விண்ணோரின் அரசி........**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசரும் ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரும்'' (திருவெளிப்பாடு 19, 16), பாவத்தின் மீதும் சாவின்மீதும் வெற்றி கண்டவருமான தன் மகனுக்கு முற்றிலும் ஒத்தவளாகுமாறே இறைவனால் இவ்வாறு உயர்த்தப்பெற்றாள்.

ஏற்கனவே விண்ணுலகில் ஆன்மாவோடும் உடலோடும் மாட்சிமைப்படுத்தப்பட்டிருக்கும் இயேசுவின் தாய் வருங்காலத்தில் நிறைவு பெறப்போகும் திருச்சபையின் உருவும் தொடக்கமுமாக விளங்குகின்றாள். இதையே புனித அருளப்பர் ஒரு காட்சியாகக் கண்டு தமது திருவெளிப்பாடு ஆகமத்தில் குறித்துத் தந்துள்ளார்: ''விண்ணகத்தில் அரியதோர் அறிகுறிதோன்றியது: பெண் ஒருத்தி காணப்பட்டாள். அவள் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தாள்; நிலாவின்மேல் நின்றுகொண்டிருந்தாள்; தலையின்மீது பன்னிரு விண்மீன்களை முடியாகச் சூடியிருந்தாள்' (12,1).

ஆனால், இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும்வரை (2 இரா. 3,10) பயணம் செய்து கொண்டிருக்கும் இறைமக்கள் முன்பு, விண்ணுலக அரசியாகிய புனித கன்னிமரி திடமான நம்பிக்கைக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக ஒளிர்கின்றாள். இவ்வுலகில் அவள் இறைமீட்பரின் அன்புமிக்க அன்னையாகவும், மற்றெவரை விடச் சிறந்த முறையில் ஆண்டவரின் தாராளத் துணையாகவும், தாழ்ந்த அடிமையாகவும் விளங்கினாள். கிறிஸ்துவைக் கருத்தாங்கிப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்து, கோயிலில் இறை தந்தைக்குக் கையளித்து, இறுதியாக அவர் சிலுவையில் உயிர் விடும்வேளை தன் மகனோடு கன்னிமரி துன்புற்றாள். இவ்வாறு ஆன்மாக்களுக்கு இயற்கைக்கு மேலான உயிரைத் திரும்பப் பெற்றுத்தர, கீழ்ப்படிதல், விசுவாசம், நம்பிக்கை, பற்றி எரியும் பரம அன்பு என்பவற்றால் மீட்பரின் அலுவலில் தனிப்பட்ட முறையில் ஒத்துழைத்தாள். எனவே, அருள் உலகில் நமக்குத் தாயாக அமையலானாள்.

கன்னிமரியின் இவ் அருள்திட்டத் தாய்மை தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முடிவில்லா நிறைவு பெறும்வரை தடையின்றி நீடிக்கிறது. ஏனெனில், விண்ணேற்புக்குப் பின்பும் இம்மீட்பு அலுவலை அவள் விட்டுவிடவில்லை. மாறாக, பல விதங்களில் பரிந்து பேசி, நித்திய மீட்பையடைய நமக்குத் தேவையான கொடைகளை என்றும் பெற்றுத் தருகின்றாள். பல இன்னல்கள் இக்கட்டுகளினிடையே இன்னும் பயணம் செய்து கொண்டிருக்கும் தன் மகனின் சகோதரர்களை, அவர்கள் தங்கள் மகிழ்ச்சி நிறை தாய் நாடு வந்து சேரும்வரை, தாய்க்குரிய அன்போடு காத்து வருகின்றாள். எனவேதான், கன்னிமரி திருச்சபையிலே பரிந்துரைப்பவள், துணையாக நிற்பவள், உதவி அளிப்பவள், இறைவனையும் மக்களையும் இணைப்பவள் எனப் பல அடைமொழிகளால் போற்றப் பெறுகிறாள். கன்னிமரியின் இந்த நிலை ஒரே இணைப்பாளரான கிறிஸ்துவின் மாண்பையும், பயன் தரு ஆற்றலையும் சிறிதளவும் குறைக்கவோ, மாற்றவோ முடியாது. (திருச்சபை, 61, 68).

---

**இறைவழிபாட்டுச்.....**

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்து, மகனுடன் சேர்ந்து பலியை இறைவனுக்கு அளிப்போம். அவர் தரும் விருந்தை ஆர்வமுடன் ஏற்று அநுபவிப்போம். நன்றி செலுத்துவோம்.

ஜோண் என்ன செய்தான் காத்திருந்தான்; பொறுமையோடு நன்மை கிடைக்கும் என்ற தளராத நம்பிக்கை அவனுக்கிருந்தது. பக்தியுடன் விசுவாசத்துடன் நம்பிக்கையுடன் கேட்டான், கிடைத்தது.

நாமும் முதலில் பலியை நிறைவேற்றிவிட்டு அல்லது அதற்கு முன்பு அல்லது வேறு நேரங்களில், அன்னை ஆறுதலாயிருக்கும் நேரங்களில் திருச்செபமாலை ஓதுவோம். அன்னையிடம் வரம் வேண்டும் அதே நோக்கத்துடன் அன்னையும் மகிழ்ச்சியுடன் செவி சாய்த்து, நமது வேண்டுகோளைப் பெற்றுத் தருவாள்.

ஆகவே, பலி ஒப்புக்கொடுக்கும் நேரத்தில் பிற வேண்டுதல்கள், செபமாலை ஓதுதல் என்பவற்றை சற்று நிறுத்திவைத்து பலியை ஒப்புக்கொடுத்தலே பொருத்தம். நியாயமானதுமாகும்.

மற்ற வேளைகளில், அநுதினமும் செபமாலை ஓதுவோம்; நம்அன்புத் தாயாகிய தேவ அன்னையின் திருவருளை நிறையப்பெறுவோம்; கடைத்தேறுவோம்.

அம்மா உன் நாமம் வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காவிய வாழ்வு

## 3. வினையும் மனையும்

வெளி உலகுக்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களையும் தமது இல்லத்திலே பெற்ருர் யேசு. அகிலத்தை மீட்க அவதரித்தவ ராயிருந்தால், அவர் தமது குறுகிய 33 ஆண்டு கால வாழ்வில் 30 ஆண்டுகளை நசரேத்தில் கழித்தது நமக்கு ஆச்சரியத்தைத் தருகின்ற தன்ருே?

இளமைப் பருவத்திலே தம் வளர்ப்புத் தந்தையை இழந்ததினுல், தாயையும் மற்றும் பொருட்களையும் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பைத் தாமே சுமக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதால், குடும்பப் பொறுப்புள்ள ஒரு நல்ல தொழிலாளியாக மாறினுர் கிறிஸ்து. ஆம்! உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும், பொருள்களுக்கும் முதலாளியான இறைவன் முழுநேரத் தொழிலாளியானுர்.

யேசு தமது பொது வாழ்வின் போது பேசிய உவமையொன்றில், ஒரு தலைவனுல் புகழ்ந்துரைக்கப் பட்ட பணியாளனைப் பற்றிய கதை இடம் பெறுகிறது. அதில் தலைவன் ஒருவன் தன் வேலையாளை விழித்து 'சில பணிகளை சிறப்பாக நீ செய்ததினுல் இப்போது உன்னிடத்தில் அதிகமான பொறுப்புக்களை ஒப்படைக்கப் போகிறேன்' என்று கூறுகின்ருன். இந்த உவமை உண்மையிலேயே யேசுவின் சொந்த வாழ்வையே படம் பிடித்துக் காட்டுகிறது. எவ்விதமெனில் பிற்காலத்தில் தாம் ஏற்க இருக்கும் பெரும் பணிக்கு முன்னேடியாக, மூலைக்கல்லாக, முழு ஆயத்தமாக இப்போது ஏற்றிருக்கும் பணியை எந்தக் குறையுமின்றி திறமையாகச் செய்தார். மேலும், கிறிஸ்து ஓர் உழைப்பாளியாக இல்லாதிருந்தால். உலக மீட்பராக விளங்கியிருக்க இயலாது.

**எஸ். அரியரெத்தினம்**

கிறிஸ்து தச்சுத் தொழிலைச் செய்து வந்தார் என்று கூறும்போது, அவரை நாம் குறைத்துப் பேசுவதாகத் தோன்றுகிறது. ஏன் என்ருல் அவர் கப்பல் கட்டும் சிறந்த கலைஞர். இது தச்சுத் தொழிலைவிட தரத்தில் உயர்ந்ததாகும். அன்றும், ஏன் இன்றும்கூட ஸ்கொத்திலாந்தில் உள்ள பல சிற்றூர்களில் குறைந்தளவு சாதனங்களுடன் சிறப்பாக, இரு உளி, ஒரு சுத்தியல், அரிவாள் ஆகிய சில கருவிகளின் உதவியினுல் வீடு, பாலம், சவப்பெட்டி, மேசை, நாற்காலி, போன்ற பொருட்களைச் செய்பவர்கள் இருக்கிருர்கள். தொழிற்கலையில் நன்குதேர்ந்த ஒரு கலைஞன். எப்பொருளையும் செய்யக்கூடிய ஆற்றல் நிறைந்தவனுவான். அவனது கரம் பட்டால் கடின உலோகமும் காய்ந்த மரமும் வளைந்து கொடுத்து அடங்கிக் கிடக்கும். கிறிஸ்துவும் இப்படிப்பட்ட தொழிற்கலைஞனுகவே துலங்கினுர்.

கிறிஸ்துவின் தொழில் முறையைப் பற்றிக் கூறும் ஒரு பரம்பரைக்கதை வழக்கில் இருந்து வந்தது. அதாவது, கலிலேயாவிலேயே மாடுகளுக்கு வேண்டிய மிகச் சிறந்த நுகங்களை அவர் செய்ததினுல், அவற்றை வாங்குவதற்காக அவருடைய இல்லத்தில் வந்து குவிந்தபடி இருந்தனராம் மக்கள். இன்றுபோலவே அன்றும் பொருட்களுக்கு விளம்பரம் செய்யும் முறை இருந்தது. பெரும்பாலும் எல்லாத் தொழிலகத்தின் முன்னுலும் அங்கு செய்யப்படும் பொருட்கள் பற்றி வியாபார முறையில் விளம்பரங்களும், விளம்பரப் பலகைகளும் மாட்டப்பட்டிருந்தன. எனவே, கிறிஸ்துவும் தமது தொழிலகத்தின் முன்னுல் ஒரு நுகத்தைக் கட்டித் தூக்கி ''என்னுடைய நுகங்கள் தரத்தில் உயர்ந்தவை'' என்று எழுதிய ஓர் அறிவிப்புப் பலகையைத் தொங்கவிட்டிருக்கக் கூடும் என்பது சில மறைநூல் அறிஞர்களின் கூற்ருகும்.

''வருந்திச் சுமை சுமக்கிறவர்களே என்னருகே வந்து எனது நுகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவை மிகவும் இலகுவாய் இருக்கின்றன'' என அவர் பிற்காலத்தில் பேசியது இதோடு வைத்து நோக்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**காவிய வாழ்வு............**

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கற்பாலது. ''எனது நுகம் இலகுவானது'' என்பதற்கு அது சிறிதும் துன்பம் தராதனெ நாம் பொருள் கொள்ளக்கூடாது. மாருக காலணிகள் தாள்களுக்கும், மேற்சட்டை உடலின் மேற்பாகத்திற்கும் பொருந்துவது போல் கிறிஸ்துவின் 'நுகமும்'

இவற்றிலிருந்து, கிறிஸ்து ஒரு சிறந்த தொழிலாளியாக விளங்கியிருப்பார் என்பது வெள்ளிடைமலே. அவர், அனுவசியமாகத் தொல்லே தரும் வாடிக்கைக்காரர் வாங்கிய பொருளுக்குப் பணம் கொடுக்க மறுக்கும் ஏமாற்றுப் பேர்வழிகள், இப்படிப் பல தரப்பட்ட மனிதரோடு நன்கு பழகியிருப்பார். மேலும் தொழில் இல்லாத நாட்களில் வந்து சூழும், சோர்வு, துன்பங்களே அனுபவ வாயிலாக உணர்ந்திருப்பார்.

ஒருநாள் மாலேப் போதில் நான் மாணவர் சிலருடன் குருத்துவப்பயிற்சி முறையைப் பற்றி கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது அவர்களில் ஒருவர் இன்றையத் தொழில் யுகத்தில் குருத்துவப் பயிற்சி முறை காலத்திற் கொவ்வாததாகக் காணப்படுகிறதெனக் குறிப்பிட்டு, நாம் தொழில் முறைகளேப்பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டுமென எடுத்துச் சொன்னுர். அப்போது மற்றுமொரு மாணவர் 'நீங்கள் என்ருவது நேர்மையோடு ஒரு நாளாவது வேலே செய்திருக்கிறீர்களா?'' என்று என்னேப் பார்த்து ஒரு விஞவை வீசினுர். இப்படியொரு கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லேயென்ருலும், அந்த மாணவரின் உள்நோக்கைப் புரிந்து கொள்ளத் தவறவில்லே. ஆனுல் கிறிஸ்துவிடம் இப்படியொரு கேள்வியைக் கேட்டிருந்தால் அவர் நிச்சயமாக 'ஆம்' என்று தான் பதிலிறுத்திருப்பார். ஏனென்ருல் தொழிலே ஒரு தூய தொண்டாகக் கருதி வாழ்ந்தவர் அவர். மேற்படி மாணவரில் பெரும்பாலோர் தொழிற் சாலேகளில் பணி செய்வோராவர்.

உடன்பிறவா சகோதர, சகோதரிகளுடன் ஒன்றி வாழ்ந்ததால் ஒரு பெரிய குடும்பத்தில் ஏற்படும் இன்பதுன்பங்களே நன்கறிந்திருந்தார் யேசு. அவர் தமது அன்ருட வாழ்வில் அமலனேத் 'தந்தை' என்றும், ஜெத்ஸமனித் தோட்டத்தில் ஆற்றெளுத் துன்பத்தால் அவதிப்படும் போது 'அப்பா' என்றும் அன்பொழுக அழைத்தார். திருத்தொண்டரான சின்னப்பர் உரோமையருக்கும் கலாத்தியருக்கும் எழுதிய அஞ்சல்களில் நாமும் இறைவனே 'அப்பா'வென அழைக்கலாமெனச் சொல்கிருர். ''ABBA'' என்பது யூதக்குழந்தைகள் தமை ஈன்ற தந்தையை அழைக்க உபயோகிக்கும் அழகிய சொல்லாகும். ஜெருசலேமுக்கு இன்று நாம் சென்ருலும் அங்குள்ள மனேகளில் அமுதமொழி சிந்தும் மழலேச் செல்வங்கள் 'அப்பா' 'அப்பா' என அழைக்கும் ஆசைக் குரலேக் கேட்டின்புறலாம். அந்நாட்டைவிட்டு தமது அன்னே நாட்டிற்குத் திரும்புவோர் ''ABBA'' எனும் அந்தச் சொல்லே தங்களது தாய் மொழியில் உள்ளவாறு மொழிபெயர்த்து மகிழ்வதைப் பார்க்கிருேம். இந்த இனிய சொல்லால் தான் யேசுவும் இறைவனே அழைத்தார். ஆனுல், உண்மையில் புனித வளனுர் புகட்டிய நற்பழக்கத்திஞல்தான் யேசு, இவ்விரு வார்தையால் இறைவனே அழைத்து வந்தார் என்பதை இயம்பவும் வேண்டுமோ? இதிலிருந்து புனித வளனுரின் தனிச் சிறப்பைப் புரிந்து கொள்ளலாமன்ருே!

கிறிஸ்து நசரேத்தில் வாழ்ந்த காலே பின்வரும் பழக்கவழக்கங்களேத் தன் பிறந்தகத்தில் ஏற்று நடந்திருக்க வேண்டும். வெள்ளே நூலில் ஒரு நீல இழையும் சேர்ந்து செய்த குஞ்சங்களே தமது ஆடைகளில் அணியும் வழக்கத்தை உடையவர்கள் யூதர்கள். இக் குஞ்சங்கள் ஆடையின் ஒவ்வொரு தொங்கலிலும் தொங்கவிடப்படும். ஆண்டவனே அடிக்கடி அகத்தில் நினேக்கவே யூதர்கள் இவ்விதக் குஞ்சங்களே அணிந்தார்கள் என்பது உண்மை காலேயும் மாலேயும் அவர்கள் ஆடைபுனேயும் போது குஞ்சங்கள் அவர்களின் கண்களிற் தெரிந்ததும், ''இறைவனின் மனிதன் நான்'' என்று ஒவ்வொருவரும் உள்ளத்தில் சொல்லிக் கொள்வார்கள். மேலும் யூதர்களின் இல்லங்களில் உள்ள கதவு நிலேயில், ஒரு தொளேயோடு கூடிய உருளே வடிவமான பெட்டி [Mezuzah] ஒன்று வைக்கப்பட்டிருக்கும். இதன் உள்ளே பழைய ஏற்பாட்டிலிருந்து சில பகுதிகளே எழுதி வைத்திருப்பர். அத்தோடு ஒரு தாளில் இறைவனின் பெயரை எழுதி வெளியில் தெரியும்படி அந்தத் தொளேக்குள் இட்டிருப்பர். பக்தியுள்ள ஒவ்வொரு யூதனும் வெளியே போகும் போதும் வரும் போதும் அதைத் தன் விரலால் தொட்டு முத்தமிட்டவாறு முழுமுதற் பொருளாம் இறைவனே நினேத்துக் கொள்வான்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜெயம் அளிக்கும்

# மன்னிப்பு (5)

## (தொடர் கதை)

★

சின்னத்தம்பியர் சிறப்பாக ஊரறியச் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டாலும், எட்வேட் அதை விரும்பவில்லை. மிக எளிய முறையில் நடந்தது. பதிவுக்காரியாலயத்திற்கு ஒரு நல்ல நாளாகப்பார்த்துப் போக வேண்டுமென்று கூறிவிட்டான். இதற்கு ஏற்றாற்போல சின்னம்மாவும் அவன் பக்கம் பேசியதால் சின்னத்தம்பியரால் தனது விருப்பத்திற்கு எதுவும் செய்ய முடியவில்லை. கிராமத்தில் அவர்களுக்கு நெருங்கிய சிலருடன் கலியாணம் முடிந்துவிட்டது. நான் வந்திறங்கியதும் இந்தச்செய்தி எட்டியது. ஏனோ இனம் புரியாத பயம் என்னைப்பற்றிக் கொண்டது. எனது நண்பன் கூறியதை நம்பி அவனது வீட்டிலும் தெரிவிக்காமல் விட்டுவிட்டேன். நானும் இல்லாத சமயத்தில் இப்படி திடீரெனச் செய்வான் என அறிந்திருந்தால், இதை இவனது பெற்றோர் மூலமாவது தடை செய்திருக்கலாம். நடந்தது நடந்து முடிந்துவிட்டது என்று மனதைச் சாந்திப்படுத்தினாலும், இனிமேல் நடப்பவை நல்லவைகளாக இருக்கவேண்டுமே என்ற பயம் மனதில் குடிகொண்டது. எட்வேட் சின்னத்தம்பியர் வீட்டிலிருந்தான். அறையை முற்றாகக் காலி செய்யவில்லை. சுந்தோசர் விஷயங்களுக்காகவும், மற்றும் பட்டணத்து வசதிக்காகவும் அவன் அறையைப் பாவித்தான். உடுப்பு, படுக்கைமுதலான சாமான்களை சின்னத்தம்பியர் வீட்டுக்குக் கொண்டு போய் வைத்திருந்தான். முக்கியமானவை எனது அறையிலேயே கிடந்தன.

இல்லறத்தில் முதலடியெடுத்து வைத்து தம்பதிகள் வெகு அழகாக நடந்தனர். அவர்கள் சந்தோஷமும் நிம்மதியுமாக இருப்பது எனக்கும் மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் வீட்டிற்கு அடிக்கடிபோய் எட்வேட்டிற்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறினேன். குறிப்பாகக் கோயில் கடமைபற்றியும், பெற்றோரின் சம்மதம் பெறுவது பற்றியும் கூறினேன். பெற்றோர் என்றதும் மிரண்டு விட்டான். தான் சொல்லும்வரை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டாம் எனக்கெஞ்சினன். எனக்கும் அவனது அப்போதைய நிலையைக்கண்டு மனமிரங்கியது. அவ்வாறே செய்வதாகக் கூறினேன். இப்பொழுதெல்லாம் கண்மணியுடன் கூச்சமின்றிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. அவளும் என்னை ஒரு சகோதரனைப் போல எண்ணி அன்பாகவும்' மரியாதையாகவும் நடந்தாள். இதனால் அவளுக்கு அநேக புத்திமதிகளைக்கூற முடிந்தது. இல்லறத்தில் இன்பமாகவும், தூய்மையாகவும் இருக்க வேண்டும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து நடக்கவேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு கொண்டு வாழவேண்டும். இறைவனைத் தியானித்து இல்லறம் சிறக்கவும், சிறந்த மக்களைப்பெறவும் தினமும் செபிக்க வேண்டும் இருவரும் ஒருமதத்தில் இருந்தால் தான் இருவரும் சேர்ந்து செபிக்கலாம். இப்படிச் சேர்ந்து செபித்தால் பல நன்மைகளை அடையலாம். மதம் மாறுவதால் நண்பனது பெற்றோரின் சம்மதத்தை இலகுவாகப் பெறலாம். இப்படி மாறுவதற்கு நீ பின்வாங்க வேண்டியதில்லை. கிறீஸ்தவவேதம் ஒரு அன்பு வேதம் சமாதானத்துக்கும், சகோதரத்துவத்திற்கும் அடிகோலும் இன்ப மார்க்கம். தன்னைப்போல தனது பிறத்தியானையும் நேசிக்கவேண்டும். அவர்களுடைய குற்றங்களை மன்னித்தால் உனது பாவங்களும் மன்னிக்கப்படும். உலக மக்கள் மேல் கொண்ட அன்பினால்தான் யேசுபெருமான் இந்த மண்ணுலகுக்கு வந்து, எங்கள் பாவ மன்னிப்புக்காகத் தன்னைத்தானே பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். சிலுவையில் அவர் தொங்கியபோது அவரை வதைத்தவர்களுக்காக மன்றாடினார். 'பிதாவே இவர்களுக்கு மன்னிப்புக்கொடும், ஏனெனில் இவர்கள் செய்வது இன்னதென்று அறியார்கள்'. இந்த உலகில் எவராவது இத்தகைய மனப்பான்மையுடன் மன்னிப்புக் கொடுக்கமுடியுமா? இப்படியாக மன்னிப்புக் கொடுத்து மன்னிப்புப் பெறும் அன்பும், சமாதானமுமான பல அரிய போதனைகளுக்கு வித்தானது கிறீஸ்தவ வேதம். எனவே இதற்கான முறைகளைச் செய்து இந்த வேதத்தில் நீயும் சேர்ந்து கொள்வதுதான் நல்லது. மேலும் பல நல்ல வேதநூல்களைக் கொடுத்து வாசித்து வரும்படியும், மேற்றிராணிமார், குருக்கள், சந்நியாச சகோதர, சகோதரிகளும், அவர்களது வாழ்க்கை முறைகளையும், புனிதர்கள் வரலாறுகளையும் அவளுக்குச் சொன்னேன். அடிக்கடி நான் இப்படிப் போதித்ததால் அது அவள் மனதின் அடித்தளத்தில் பதிந்து விட்டதை இன்று என்னால் உணரமுடிகிறது.

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மன்னிப்பு...........**

[6ம் பக்கத் தொடர்ச்சி]

நானும் எனது சமயத்தில் பற்றுள்ளவன். கோயிற்கடமைகளை சரிவரச் செய்யவேண்டும். இதில் தவறக்கூடாது. இதுதான் எனது கொள்கை. இதை நான் மற்றவர்களுக்கும் அடிக்கடி கூறிவருவேன்.

வழமைபோல காரியங்கள் நடந்தாலும், காலம் எதையும் பொருட்படுத்தாமல் ஓடி விடும். நான்கு மாதம் முடிந்துவிட்டது. கலியாணம் நேற்று நடந்ததுபோல இருந்தது. கண்மணி கர்ப்பவதியாகி நின்றாள். இது அந்தக்குடும்பத்தை மகிழ்ச்சியிலாழ்த்தியது சின்னத்தம்பியர் மகளை நிலத்தில் நடக்க விடமாட்டார். ஓடாதே, குனியாதே, நிமிராதே; அப்பப்பா! அந்த அன்பான கட்டளைகள் அவளுக்குக் கஷ்டமாக இருந்தன. புள்ளிமானெனத் துள்ளித்திரிந்தவளைக் கூண்டில் அடைத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. மற்றவர்களும் அவரவர் மனநிலைக்கு ஏற்றவாறு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். எற்வேட் மாத்திரம் சற்றுக் கவலையுடன் காணப்பட்டான். நாளடைவில் இது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. வழக்கமான கலகலப்பு சற்றுக் குறைந்துகொண்டு வந்தது. ஏனென்று புரியவில்லை. அடிக்கடி அறையில் நேரத்தைத் தனிமையில் கழித்தான். ஏனென்று கேட்டால் 'ஒன்றுமில்லை' என்று மழுப்புவான். கண்மணியுடன் இருப்பதைவிடக் கூடுதலாக வெளியிலேயே அவன் பொழுது கழிந்தது. இதனல் சிறிது மறந்திருந்த குடிப்பழக்கமும் தூண்டப்பட்டது. என்னிடமும் சரிவரப் பேசுவதில்லை. குடும்பச்சண்டையானல் நாம் தலையிடக்கூடாது. சற்றுப் பொறுத்துப் பார்ப்போம் என எனது அலுவல்களை வழமைபோல் செய்துவந்தேன்.

கண்மணி அழுதாள், அழுதாள் முடிவில்லாமல் அழுதாள்; அழுதுகொண்டே இருந்தாள். வாழ்க்கையின் சோக வரலாற்றின் ஆரம்பம் அவளைப் பிடித்து உலுக்கிவிட்டது என்னைக்கண்டதும் ''மாஸ்டர்'' என்று 'ஓ' வென்று அழுதுவிட்டாள். அதிகம் அழுததால் முகம் சிவந்து உப்பிப்போயிருந்தது. சின்னத்தம்பியர் 'என்ன மாஸ்டரிது' என்று அங்கு மிங்கும் ஓடினர். நான் யாருக்கு ஆறுதல் சொல்ல? எனக்கே சற்று பயமாகி விட்டது. தலைமையாசிரியரிடம் விஷயத்தைச் சொன்னேன். ''கொழும்புக்குப் போயிற்று வருவதாகக் சொல்லிற்றுப் போனவன், பத்து நாட்களாயிற்று இன்னும் வரல்ல. எனக்குப் பயமாக இருக்கு. கொஞ்சநாள் அவனுடைய போக்கே ஒரு மாதிரியாக இருந்தது. சற்று ஒதுக்கிநின்று கவனிப்போமென்று பேசாமலிருந்தேன். இப்படிச் செய்வானெனக் கடைசி வரையும் நினைக்கல்ல. அந்தப் பெண்பாவம் அழுதே செத்துப் போவாள்போலிருக்கிறது''

இதற்குள் கிராமத்திலுள்ள சிலருக்கு இது விளங்கிவிட்டது. இனிக் கேட்கவா வேண்டும்? ''எனக்குத் தெரியும் இப்படி நடக்குமென்று'' இப்படிச் சிலர் ''எல்லாம் அந்த மாஸ்டர் பயலால் வந்தவினை'' ''அவன்தான் காரணம்'' இப்படி பல வசை மொழிகளும் எனக்கும் சேர்த்து விழுந்தன. நான் அவைகளை பொருட்படுத்தாமல் அவனைக் கொண்டுவந்தால் தானக அடங்கி விடுவார்கள்என்று எட்வேட்டைத்தேடினேன். அவனது வேலைத்தலத்துக்குப்போய் விசாரித்தேன். லீவில் சென்றிருப்பதாக மாத்திரம் அறியமுடிந்தது. வேறுதகவல் எதுவும் சரிவரக் கிடைக்கவில்லை. இன்று வருவான் நாளை வருவான் என்று எதிர்பார்த்து மாதமும் முடிந்துவிட்டது. ஊரவர்கள் எட்வேட்டைப் பற்றியும், எங்கள் ஊரைப்பற்றியும் குறைவாகப் பேசிய போதெல்லாம், எனக்கு இரத்தம் கொதித்தது. தலைமையாசிரியரின் அரிய சொற்கள் உரிய நேரத்தில் என்னைக் காத்து வந்தன. அவன் வேலை செய்த இடத்தில் எனக்கும் இரண்டொருவர் அவன் மூலமாக அறிமுகமாக இருந்தார்கள். அவர்களை அண்டிப் பக்குவமாக விஷயத்தைச்சொல்லிக் கேட்டுப்பார்த்தேன். நீண்ட நேரம் பேசிய பின் அவன் சிலாபப் பகுதியில் ஏதோ ஒரு காட்டுக்கு மாற்றம் எடுத்துக்கொண்டு போய் விட்டதாக அறிந்தேன். இதை எவருக்கும் தெரிவிக்கக்கூடாது என அவன் கேட்டுக் கொண்டபடியாலும், அவன் மேற்கொண்ட அன்பாலும் முதலில் அவர்கள் இதை என்னிடம் மறைத்துவிட்டனர்.

கண்மணி அழுதாள். புழுவாகத் துடித்தாள். உள்ளத்துச் சுமையுடன் உடம்பிலும் ஒரு சுமை வளர்கிறதே. இந்த அவமானத்தை அவளால்த்தாங்க முடியவில்லை. ஊண் உறக்கமின்றிக் கிடந்தாள். இதனல் அவளுக்கு ஏதாவது ஏற்பட்டுவிடுமோ என்று பயப்பட வேண்டியிருந்தது. அவளோ அப்படி ஏதாவது ஏற்பட்டு தனது உயிர் போகாதா என்று ஆசைப்பட்டாள். தலைமையாசிரியரும் வந்து ''அழாதேம்மா'' என்பதற்குமேல் அவரால் பேசமுடியாமல் சரீரம் ஆடிவிட்டது ''என்னென்று நானிருக்க, அழுவதைதத்தவிர என்னல் சாக முடியலியே, கடவுள் ஏனினக்கு இப்படி ஒரு இடியைப்போட்டார். ஏன் என்

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியத்தைப் படிப்போம்

## பழையதைப் பார்ப்போம்

சென்ற இதழில் விவிலிய நூலிற் பரந்து கிடக்கும் விதம் விதமான செய்திச் சாரங்களை சற்று சுருக்கமாக பார்த்தோம். இம்முறை இச்செய்திகளைக்கொண்டுள்ள இணையற்ற இவ் வேட்டின் பெரும் பகுதியான பழைய ஏற்பாட்டைச் சற்று கூர்ந்து கவனிப்போம். பழைய ஏற்பாட்டின் 45 புத்தகங்களையும் மூன்று பெரும் பகுதிகளாய் பிரிக்கலாம்.

1. தோரு (Torah) என்று எபிரேய மொழியில் அழைக்கப்படும் சட்ட நூல்கள் அடங்கிய பகுதி.
2. தீர்க்கதரிசனங்கள் அடங்கிய பகுதி (Prophecies)
3. சரித்திர நூல்கள் (Historical Books)

**1. தோரு (Torah) அல்லது சட்டநூல்கள்**

இது தன்னகத்தே ஐம்பெரும் பகுதிகளை கொண்டதாய் அமைந்துள்ளது. இதனால் இதனை பென்ரரெயுக் (Pentateuch) என்று கிரேக்க மொழியில் அழைப்பர். இச் சட்ட நூல்கள் அனைத்தும் யூதமக்களின் ஒழுங்குகளையும் வழிபடும் முறைகளையும் எடுத்து இயம்புகின்றன. இவைகளை மோயீசனின் புத்தகங்கள் என்று அழைப்பதுண்டு (Books of Moses). இதனுள் அடங்கியுள்ளன ஐம்பெரும் பகுதிகள்.

(i) ஆதியாகமம்
(ii) யாத்திரை ஆகமம்
(iii) லேவியர் ஆகமம்
(iv) எண் ஆகமம்
(v) உப ஆகமம், என்பனவாகும்

**ஆதியாகம்:-**

ஆதியாகமம் யூதமக்கள் மத்தியிலே வழங்கி வந்த மனித ஆரம்பம் பற்றியும், ஆபிரகாம் ஈசாக் யாக்கோப் யோசப் ஆகிய பிதாப் பிதாக்களின் கீழ் இஸ்ரவேல் இனத்தின் வரலாற்றைப் பற்றியும் எடுத்துரைக்கிறது.

**யாத்திரையாகமம்:-**

மோயீசனின் வாழ்க்கைச்சரிதையினையும், அவருடைய தலைமையின் கீழ் இஸ்ரவேல் மக்கள் எகிப்திய மன்னனின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதையும் எமக்கு எடுத்தியம்புகின்றது. மேலும் இறைவன் இஸ்ரவேல் மக்களுடன் சீனாய் மலைமீது செய்து கொண்ட உடன்படிக்கையினையும் அப்போது அளிக்கப்பட்ட பத்துக் கற்பனைகளையும் பறைசாற்றுகின்றது.

**லேவியர் ஆகமம்:-**

யூத மக்களின் வழிபாட்டு முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் விபரமாய் எடுத்தியம்பும் ஒரு நூலாகும். இதன் ஒழுங்குகள் அனைத்தும் இஸ்ராயேல் மக்கள் வனந்தரத்திலே வாழ்ந்த காலச் சரிதையினை ஒட்டிய நூலாய் உள்ளது.

**எண்ணாகமம்:-**

இது லேவியர் ஆகமத்தின் தொடர்ச்சியாகும். இவண் யூதமக்களை வனந்தரத்தின் ஊடாக வாக்களிக்கப்பட்ட நாட்டை அடையும் வரை நடைபெறுகின்றனவைகளை எடுத்துரைக்கின்றது.

**உப ஆகமம்:-**

இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாடாகிய பாலும், தேனும் பொழியும் கானான் தேசத்தில் கால் வைத்த நாள் தொட்டு, அவர்களின் வாழ்க்கையினை படம் போல் சித்தரிக்கும் பகுதியாய் அமைந்துள்ளது. இப்பகுதியிலே மோயீசன் அளித்த முடிவுரைகளும், பிரியாவிடைப் பொன்மொழிகளும் பரந்து கிடப்பது குறிப்பிடத்தக்கது.

**அருட்திரு. K. சுவாமிநாதன் அடிகள்.**

**தீர்க்கதரிசனங்கள்:-**

இஸ்ரயேல் மக்கள் கானான் தேசத்தில் வாழ்ந்த காலத்தில் தான் தீர்க்கதரிசிகள் என்று இவ்வளவு காலமாக அழைக்கப்பட்டு வந்த இறைவாக்கினர்களின் பணிகள் அதிகமாய் இருநதன. தீர்க்கதரிசனங்கள் என்று

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்ரேர் மன்றம்

## கத்தோலிக்க திருமணத்தின் மாண்பு.

"திரு"

திருமணம் என்றதும் மணமக்களின் சாத்திரப் பொருத்தம், கிரக ஆட்சிப்பலன் நல்ல நேரம், நாள் பார்த்தல் போன்ற மூடக் கொள்கைகளும், இல்லாமல் போவதில்லை. எக் குலத்தவரும் சரி, எம் மதத்தவரும் சரி, கிறீஸ்தவர்களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. கடவுள் காலங்களுக்கும் உள்ளங்களுக்கும் தலைவர், அவர் மனிதனுக்குப் புத்தியை அளித்திருக்கின்ருர். இரு மணமக்களினதும் உள்ளங்கள், சமூகம், சூழ்நிலை, பொருத்தமாக இருக்கின்றதா என்பதைப் பார்த்து, திருமண ஒழுங்குகள் பண்ணுவதை விட்டு மனிதன் தன்னேடு ஓரளவும் தொடர்பில்லாத கிரகங்களின் ஒற்றுமையைப் பார்க்கின்ருன். இருவர் உள்ளம் ஒற்றுமையடைய நல்லநாளும் சாத்திரப் பொருத்தமும் பார்த்துத் திருமணத்தில் இறங்கியவர்களின் குடும்பம் சீரழிந்து விடுவதையும் பார்க்கின்ரேம். மற்றைய குடும்பங்களைப் போன்று பிணியும், துயரமும், பிரிவும் இல்லாமல் போகவில்லையே! அப்படியானல் இந்த மூடக்கொள்கைகள், பழக்க வழக்கங்கள் ஏன்?

கிறீஸ்தவர்களாகிய நாம் பாஸ்காத் திரியில், கிறீஸ்துவின் சின்னத்தில் காலத்தின் தலைவர் அவர் என்று ஒவ்வொரு வருடமும் குறிக்கின்ரேம்.

ஆகவே! கிறீஸ்தவர்கள் எல்லாக் காலமும் நேரம் ஒன்று என்பதை மறந்து விடுவதேன்? கிரகதோஷம் பார்ப்பதேன்? கண்ணுல் காண்கின்ற ஒரு நண்பனுக்கு தீங்கு இழைத்து விட்டால், மன்னிப்புக் கேட்காதவர்கள், காணு ஒரு கிரகத்தின் வழியாக வருத்தம் ஏற்பட்டதென்று தோஷம் கழிக்க பணம் செலவு பண்ணுவார்கள். இவர்களின் புத்திதான் என்னே!

திருமணம் ஒரு பொம்மை விளையாட்டல்ல, ஒருநாள் விளையாடி முடித்துவிட; திருமணம் ஒரு வெறும் சடங்கல்ல, அரை மணி நேரத்துடன் முடிந்துபோக; அல்லது ஆசாங்கப் பேப்பர் வேலையுமல்ல "பைலில்" சேர்த்துவிட்டு அலுமாரிகளில் அடைத்து வைத்துக் கறையானுக்கு இரையாக்க; அது ஒரு தெய்வீகச் செயல், கடவுளுடன் சேர்ந்து, மனிதன் படைப்பு வேலையில் ஈடுபடும், பங்கு பெறும் உன்னத தொழில்.

அதற்கு இரு உடல்கள் மட்டுமிருந்தால் போதாது. உள்ளங்களும் ஒன்றுபட வேண்டும். ஒரு உள்ளம் இன்னெரு உள்ளத்தின் பீடமாக மாறவேண்டும். இதை விட்டு "சுடுகிறது மடியைப்பிடி" என்ற அவசரத்தில் நிற்போரின் நிலையை என்னென்போம். தம் மக்கள் நன்ருக ஆயத்தப்பட்டிருக்கிருர்களா என்பதை அவர்கள் கவனிப்பதில்லை. சுவாமி மார்களின் அனுமதியும், எழுத்து வேலையும் முடிந்துவிட்டால் போதும் என்றே எண்ணுகிருர்கள், எம் மேற்றிராசனத்தில், இன்னும் சில குறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. பல மேற்றிராசனங்களில் இருப்பதைப்போல் இங்கு கானு வகுப்புகள் இல்லை இளைஞர்களைத் திருமணத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கு, அலலது திருமணத் துறையில் புதிதாக இறங்கியவர்களுக்கு உதவி செய்ய அவர்களுடய ஆரம்பக் கஷ்டங்களில் வழிகாட்ட. இக்குறை நீக்கப்படவேண்டும். கத்தோலிக்கப் பெற்ருேரின் இன்னெரு கவலை: தம் வளர்ந்த பெண்செல்வங்களுக்குத் தக்க கத்தோலிக்க வாழ்க்கைத் துணைவரைத் தேடுவது. இது இலகுவான கருமமல்ல. எனினும் இதைச் செய்வதற்கு, எம் மேற்றிராசனத்தில், ஒரு குழுவை நியமித்திருக்கின்ருர்கள்.

திருமண மலரை மாசுபடுத்தும் சில தூசிகளைப்பற்றி இதுவரை ஆராய்ந்தோம். குடும்பத்தில் சிக்கல்களுக்கு இவைகள் வழி வகுக்கக்கூடும். இனி நம்நாட்டின் குடும்பங்களில் குழப்பங்களைக் கொண்டுவரும் சில காரணங்களைப் பார்ப்போம்.


சீழ்த்தேச நடைமுறைப்படி "கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன்" என்று கூறுவார்கள். ஆகவே, ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் பிரியாது வாழ

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது மேற்றிராசனத்தின் புதிய குரவர்

சென்ற வைகாசித்திங்கள் 17ம் திகதி ரோமையில் புனித பேதுருவானவர் பேராலய முற்றத்தில் வழக்கத்திற்கு மேலான சனத்திரள். சரித்திரத்தில் முதற்தடவையாக பரிசுத்த பாப்பிறை 6ம் சின்னப்பர் 279 தியாக்கோன்மார்களை குருத்துவத்திற்கு உயர்த்தினார். இந்த நிகழ்ச்சியை இயற்கையும் சிறப்பிக்க நினைத்து, வாழ்த்துமாரி பொழிவதுபோன்று இடைவிடாது மழை துமித்துக்கொண்டிருந்தது. பல நாடுகளிலுமிருந்தும் குருப்பட்டம் பெற்றவர்களுள் எமது ஈழத்தின் பிரதிநிதியாக, அவ்வுன்னத பதவிக்கு உயர்த்தப்பட்டவர் எமது திருக்கோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசனத்தைச் சேர்ந்த அருட்திரு யோசேவ் செல்வராசா அடிகளார்.



அருட்திரு யோசேவ் செல்வராசா.

இவர் கரவெட்டி (யாழ்ப்பாணம்) யைச் சேர்ந்த திருவாளர் வரப்பிரகாசத்தினதும் திருமதி ஞானம்மா அவர்களினதும் மூத்தப் புதல்வராக 1945ம் ஆண்டு பங்குனி முதலாம் நாள் பிறந்தார். தந்தையின் வேலை காரணமாகத் தமது இளம் பிராயத்தை திருக்கோணமலையில் கழிக்க நேர்ந்தது. அங்கு தான் தமது படிப்புக்களை புனித சவேரியார் பாடசாலையிலும் புனித சூசையப்பர் கல்லூரியிலும் திறமையாகச் செய்து முடித்தார். மேல்நீ வகுப்பிலிருக்கையிலே தேவ அழைத்தலை ஏற்று சிறிய குருமடத்தில் சேர்ந்தார். அங்கிருந்து 1961ம் ஆண்டு கண்டி குருமடத்திற்கு குருத்துவப் படிப்புக்களைத் தொடரும்படியாக அனுப்பப்பட்டார். அவருடைய திறமையைக் கண்ட மேற்றிராணியார் அவரை 1962ம் ஆண்டில் பூனா பாப்பரசர் குருமடத்திற்கும், 1963ல் ரோமை வேதப்பரப்புதல் குருமடத்திற்கும் அனுப்பினார். ரோமையில் ஏழு வருடங்கள் தம்முடைய படிப்புக்களைத் திறமையாகச் செய்து முடித்துள்ளார்.

அன்னார் 7 வருடங்களுக்குப்பின்பு தமது தாயகம் திரும்பியுள்ளார். ஆவணித் திங்கள் 1ம் நாள் தமது பிறந்தகத்தில் பரலோகமாதா தேவாலயத்தில் முதற் பாடற்பூசையை ஒப்புக்கொடுத்தார்.

மேற்றிராணியாண்டகை அவரை மட்டக்களப்பு புளியடிக்குடாப் பங்கின் உதவிக் குரவராக நியமித்துள்ளார். அடிகளாருக்கு ''தொண்டன்'' தன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் நீண்ட காலம் கிறீஸ்துவின் சேவையில் இன்புற வேண்டுமென்று ஆசி கூறுகின்றான்.

★

---

**விவிலியத்தைப் படிப்போம்........**

[8ம் பக்கத் தொடர்ச்சி]

அழைக்கப்படும் இறை வாக்குகளை நாம் ஆராயும் பொழுது, அவன் மெசியாவின் வருகையைப்பற்றி விபரமான விளக்கங்களைக்காண முடிகிறது. இறைவனால் அனுப்பப்பட விருக்கும் அபிசேகம் செய்யப்பட்ட மெசாயா இஸ்ரவேல் இனத்தின் இரட்சகராகவும் தாவீதின் குலத்தில் ஒருவராகவும் இருப்பார் என்பதை தெளிவாக சித்தரிக்கின்றது. மேலும், அனுப்பப்படவிருப்பவர் அறுப்பவன் முன்னுள்ள ஆடுபோல் அமைதி உள்ளவராயும், தாவீதின் குலத்தில் தோன்றிய ஒளி விளக்காயும், உண்மையின் சாட்சியாகவும், நீதியின் சின்னமாயும் இருப்பார் என்பதை நாம் காணமுடிகிறது. இப்பகுதியிலே பாவத்தினைப் பற்றியும் அதன் கோரவிளைவுகளைப் பற்றியும் இறைவனின் எல்லையற்ற அன்பினைப் பற்றியும் எழுதப்பட்டிருப்பதை காணலாம். மேலும் இறைவன் நீதியும் நேர்மையும் உள்ளவராயும் அதே வேலையில் ஆளவற்ற அன்பின் ஊற்றுயும் இருக்கின்றார் என்கிற செய்திகளும் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறை அறிவு மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேஷம்.

### அருட் திரு. R. S. லோப்பு அடிகள்.

### 3. (அ) இயேசுவின் பிறப்பும் இளமைப் பருவமும்.

லூக்காஸ் சுவிசேசத்தின் முதலிரண்டு அத்தியாயங்களின் அமைப்பு முறையானது, அதை எழுதியவரின் இலக்கியத் திறமைக்கு, ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. கிறீஸ்துவின் பாலப் பிராயத்தைப் படம் பிடித்துக் காட்டவிரும்பிய லூக்காஸ், குழந்தை ஸ்நாபக அருளப்பருடன், ஒப்பிட்டுக் கூறுகின்றார். கிறீஸ்துவின் தாயாகிய கன்னிமரியாளைப் பற்றிக் கூறவிரும்பிய சுவிசேசகர், ஸ்நாபக அருளப்பரின் தந்தையாகிய சக்கரியாசுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். லூக்காஸ்கூறும் இயேசுவின் குழந்தைப் பருவக் கதையைக் கவனமாகப் பார்த்தால், இவர், இக்கதையின் மூலம், என்ன உண்மையை உணர்த்த விரும்புகின்றார் என்பது தெளிவாகின்றது. கிறீஸ்துவினதும், ஸ்நாபக அருளப்பரினதும் பாலப் பிராயத்தை, ஒற்றுமை வேற்றுமைப் படுத்திக் காட்டுவதின் மூலம், கிறீஸ்துவின் மகிமையையும், பெருமையையும் வலியுறுத்துகின்றார் லூக்காஸ். இயேசுவின் தாயாகிய கன்னிமரியாளை, ஸ்நாபக அருளப்பரின் தந்தையாகிய சக்கரியாசிலும் பார்க்க, அதி உன்னதமானவராக, மேம்பட்டவராக உயர்த்திக் காட்டுகின்றார். உதாரணமாக: ''அவர் இஸ்ராயேலர் பலரை அவர்களுடைய கடவுளாகிய ஆண்டவர் பக்கம் திருப்புவார்'' (1,16). ''அவர் மேன்மை மிக்கவராக இருப்பார். உன்னதரின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தையாகிய தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குலத்தின்மீது என்றென்றும் அரசாள்வார். அவருடைய ஆட்சிக்கு முடிவேஇராது'' என்றார். (1,32-33).

சுவிசேசத்தின் முதலிரண்டு அத்தியாயங்களும், இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளிருவரும் பிறக்கப் போவதையறிவிக்கும் பகுதி ஒன்று, குழந்தைகளிருவரும் பிறக்கும் பகுதி மற்றொன்று. இப்பகுதிகள் ஒவ்வொன்றும், தம்முள் சிறு பகுதிகள் இரண்டைக் கொண்டுள்ளன. ஒன்று:சந்திப்பு (Visitation: 1,42–56), மற்றது கண்டுபிடிப்பு (Finding:2, 41'52).

இயேசுவின் பிறப்பும், இளமைப் பருவமும் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்:

I. கிறீஸ்துவின் பிறப்பு பற்றி முன் அறிவிப்பு. 1,26–38)
- பெற்றோரை அறிமுகம் செய்து வைத்தல்.
- சம்மனசு வருகை.
- கன்னிமரியாள் பயப்பிடுதல்.
- பயப்படவேண்டாம் என்று கூறப்படுகிறது.

கேள்வி: ''இது எங்ஙனம் ஆகும்?''

பதில்: சம்மனசிடமிருந்து 'இறைவெளிப்பாடு' கடவுள் விருப்பத்துற்கு கன்னிமரியின் உடனடியான விருப்பம்.
சம்மனசு மறைந்து போகின்றது.

II. உடன் உபசாரமான கதை (Complimetary episode).
மரியாள், எலிசபேத்தம்மாளைச் சந்தித்தல் (Visitation)
முடிவு (Conclusion)
மரியாள் வீடு திரும்புதல் (Return of Mary)

III. கிறீஸ்துவின் பிறப்பு: 2,1-20.
சம்மனசுகளினதும், இடையரினதும் பாடல்கள்.

IV. இயேசுவின் விருத்த சேதனமும், இயேசு தம்மை வெளிப்படுத்துதலும்: 2,21-35
இரட்சகரின் வெளிப்பாடு.
பாடல்: (Nunc Dimittis)
அன்னாவின் உதவிக்கதை: 36-38
முடிவு: (Conclusion)
வளர்ச்சியின் பல்லவி: (Refrain of growth) 2, 40

V. உபசாரமான கதை: 2, 41–52.
ஜெருசலேம் கோவிலில் கண்டு பிடித்தல்.
வளர்ச்சியின் பல்லவி: (2, 52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2460 அடி உயரத்தில் நம்பிக்கை

கிறிஸ்துமேல் வைக்கும் நம்பிக்கையின் சத்தி மகத்தான தொன்றுகும். கிறிஸ்து பல இடங்களில் போதிக்கும்போது விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு இவற்றைப்பற்றி அதிகமாகப் பேசியுள்ளதை நாம் பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். எனவே நம்பிக்கையின் சக்திக்கு ஓர் உதாரணம் இதோ!

ரியோடி ஜெனிரோவில் கம்பீரமாக எழுந்து நிற்கிறது ஒரு மலை. அதன் உச்சியில் இரண்டாயிரத்து நானூற்றி அறுபதாவது அடியில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் பிரமாண்டமான சிலையொன்று நிறுவப்பட்டிருக்கின்றது. மலை உச்சியில் 125 அடி உயரத்திற்கு ஓங்கி எழுந்துள்ள அந்தச் சிலையை வருடத்திற்கு ஒருமுறை டில்சன், ஃப்ளோரினு என்ற இரு சகோதரர்கள் கழுவிச் சுத்தம் செய்கிறார்கள். இயேசுவின் நீண்ட கரம் சுத்தம் செய்வதுதான் எவ்வளவு கஷ்டம்! சில சமயங்களில் 60 மைல் வேகத்தில் காற்றடிக்கும். அப்போது மயிர்கூச் செறியும்! ஏனெனில் அவரின் கைகளை சுத்தம் செய்யும் போது அக்கையின் மேல் படுத்திருந்தே கழுவ வேண்டும். 1965ஆம் ஆண்டு சுத்தம் செய்யும் போது ஊசலாடுவது போல யேசுவின் ஒரு கையின் முனையில் தொங்கித் தவித்த அனுபவம் ஃப்ளோரினுவின் வாழ்நாளில் மறக்கமுடியாத தொன்றுகும். எவ்வளவு தான் ஆபத்து நிறைந்த பணியாக இருந்தாலும் அச்சமின்றி அதை முடித்துவிட்டு இறங்கினர் ஃப்ளோரினு. "எனக்கிருந்த பயத்தைவிட எனக்கிருந்த நம்பிக்கையின் சக்திதான் அதிகம்" என்கிறார் அவர்.

தொகுத்தவர்.

கல்முனை. E. C. பெர்னாண்டோ

---

**மன்னிப்பு............**

[7ம் பக்கத் தொடர்ச்சி]

னைப் படைத்தார். இந்த அவமானத்துடன் ஊரில் இனி தலைநிமிர்ந்து வாழமுடியுமாய்யா' என்று சொல்லியழுதவுடன் அவரே ஏதும் பேசவில்லை. அழுது முடியட்டும் என்று விட்டுவிட்டார். நினைவு மயங்கி அவள் விழுந்த போது அவரே அவளைத் தாங்கி தண்ணீர் கொடுத்தார். சுயநினைவு வந்தவுடன் மீண்டும் ஆரம்பித்துவிட்டாள். இல்லறத்தின் இன்பமான பகுதியை அனுபவித்துக் கொண்டிருந்தவளுக்கு இந்தத் திடீர்த்துன்பம் அளவு கடந்த வேதனையைக் கொடுத்தது. அதிலும் அழகும் இளமையும்உள்ளபெண்ணுக்கு இந்தக் கதிவர மனஞ்சலிக்குமா? ஊரவரின் கேலிப் பேச்சும், மகளின் கதியும் சேர்ந்து சின்னத் தம்பியரை ஆத்திரங் கொள்ளச்செய்தது. வாய்க்கு வந்தபடி திட்டினர். பொலிசில் முறையிடப் போவதாகச் சொன்னர். 'வேண்டாமப்பா இந்தக் கோலத்தில் ஒருநாளும் ஏறுத பொலீஸ் ஸ்ரேஷனுக்கும் வரச்சொல்லுறீங்களா? இதில் கிடந்து செத்து மடிவேனே தவிர அங்கு வரவே மாட்டேன்" என்று மகள் மறுத்து விட்டாள். இந்த நிலையில் அவர் யோசித்து, யோசித்து நாளடைவில் ஒரு நடைப்பிணமானர். முறையான பதிலில்லாமல் எந்த முறையில் வழக்காடுவது என்ற பயமும் அவரை அப்படியாக்கி விட்டது. இவையெல்லாம் பார்த்துச் சகியாமல் லீவு எடுத்துக்கொண்டு ஊருக்குப் போனலாவது ஆறுதலாக இருக்கும். ஆனல் இந்த நிலையில் அவர்களை விட்டுப்பிரிய மனமில்லை. மேலும் "அவனும் ஒளித்து விட்டான்" என்று என் மீதும் கதை கட்டுவார்கள். ஊருக்குப் போவதால் எட்வேட்டைப் பற்றியும் சிலவேளை ஏதாவது தகவல் கிடைக்கலாம் என்று கண்மணியிடம் விடை பெற்றேன். கண்ணீருடன் "சரி" என்றள். "அழாதேயம்மா" என்பதற்கு மேல பேச முடியவில்லை. நெஞ்சடைத்தது. இந்தநிலை எனக்கு ஊரிலிருந்து திரும்பி வந்த பொழுதும் ஏற்பட்டது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இளைஞர் இல்லம்

**உனது எதிர்காலம் என்ன?**

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

இன்றைய இளைஞனது பிரச்சினைகள் முளைத்துக் கிளைத்துப் பல்கிப் பெருகியுள்ளன. அவற்றை வேலைப் பிரச்சினை, தீர்மானமற்ற நிலை, நிலையற்ற காதல் என்ற முத்தலைப்பின் கீழ் ஒருங்கு படுத்தலாம்,

வேலைப் பிரச்சினையைப் பற்றி யான் இக் கட்டுரையில் குறிப்பிட விரும்பவில்லை. காரணம் யாதெனில்: இது அதிகமான இளைஞர்களைப் பாதித்தாலும், அவர்களை மட்டும்தான் பாதிப்பதில்லை. இது ஒரு விதத்தில் அகில பிரச்சினையாகப் பலரிலும் படர்ந்திருக்கின்றது. வேலை இல்லாத் திண்டாட்டம் மனிதன் சன்மார்க்க வாழ்க்கையை மாற்றியமைக்கலாம். இது இளைஞனின் வாழ்க்கையைப் பாதிக்கின்றது என்றால் அது உண்மை எனக் கூறிவிடலாம். ஆனால் ஒரு இளைஞன் ஒரு தொழிலை அடைந்தபின் அவன் இப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்கிறான்.

தீர்மானமற்ற நிலை. நிலையற்ற காதல் ஆகிய பிரச்சினைகள் இளைஞரைத் தமது அரக்கப் பிடிக்குள் சிக்கவைத்து விஸ்பரூபத்தைக் காட்டி அலட்டிக் கொண்டிருக்கின்றன. இவைகட்குள் ஆட்பட்ட இளைஞன், 'வாழ்க்கையே விரிந்து கிடக்கும் துன்பச் சாகரமோ', 'தூக்க முடியாத சுமையோ' என்று எண்ணத் தொடங்குகின்றான்.

மலையேற வேண்டுமாயின் சிறு ஊன்றுதடியாவது வேண்டும். கடல் கடக்க வேண்டுமாயின் சிறு கலமாவது தேவை. அதுபோல வாழ்க்கையில் கரையேற வேண்டுமாயின் தீர்மானம் என்ற ஆயுதம் கட்டாயம் கட்டாயம் தேவை.

இன்று தன் வாழ்க்கையின் வளமான பாதையை திருப்பாது, ஏதோ கால்போன போக்கெல்லாம் வாழ்க்கையின் பாதை என்று கட்டற்ற மனதின் போக்குக்கேற்ப வாழ்வதாயிருந்தால் இளைஞன் உண்மையான வாழ்க்கையை நிறுவமாட்டான். ஆகையாற் திக்கற்ற காட்டிற் திகைத்து நிற்பவன் போல நிற்கின்றான். விரக்தி மனப்பான்மையுடன் பேச நா எழாது ஊமைக்கனவு கண்டு கொண்டிருக்கின்றான். தன்னைப்பற்றித் தனது வாழ்வைப் பற்றிச் சுற்றுடலைப்பற்றி ஏன்? எங்கே? எதற்கு? யார்? எப்படி? என்ற விவேக வினாக்களை அறியத் தவறிவிடுகிறான்.

படுகுழியிற் சென்று கொண்டிருக்கின்ற திக்கற்ற இளைஞர் சமூகத்தை மேலும் மேலும் விழ விடாது வளர்ந்தவர்கள் பாதுகாக்க முன் வர வேண்டும். அவர்களைத் தூரத்தே தள்ளி வைக்கக் கூடாது.

குழந்தை, சுட்டித்தனம் பேசியவுடன் சிரித்தும், சண்டித்தனம் காட்டியதும் சல்லாபித்தும், பிஞ்சுமொழி பேசியதும் கொஞ்சி விளையாடியும் இன்பம் பெறுகின்ற தாயான வள்தான், குற்றம் செய்கின்ற போது கண்டிக்கவுஞ் செய்கிறாள். அதே போல இளைஞர் சமூகத்தால், சமூகத்துக்கு வரும் ஆக்கப் பயன்களை அனுபவிக்கும் வளர்ந்தோர், அதே இளைஞர் தவறான பாதையிற் சென்று கொண்டிருக்கும் போது நேரான பாதையைக் காட்டும் கடமையைச் செய்ய வேண்டும்.

தீர்மானமற்ற நிலை இளைஞனின் வாழ்க்கையிலிடம் பெறச் சில பெற்றோர்கள் காலாயிருக்கின்றனர். அவர்களின் கவலையீனத்தால் இளைஞரின் அறிவு வாழ்க்கையிலோசரி, ஆன்மீக வாழ்க்கையிலோசரி ஓட்டை உடைசல் ஏட்பட்டு விடுகின்றன. இந்நிலையில் இளைஞர், சூழலுக்கும் வயதுக்கும் நண்பர்களின் நிபந்தனைகட்கும் ஏற்ப ஆடும் நடனத்தின் சீர்கேடு, கஷ்டம் கால கட்டத்தில் தெரிய வந்தும் கூட, தங்கள் நிலையை அறிந்தும் தீர்மானம் செய்யமுடியாத ஒரு நிலையில் அகப்பட்டுத் தத்தளிக்கின்றனர். கடத்திய கஷ்டமற்ற வாழ்க்கை பிழையெனவும் ஆடிய நடனம், பாடிய பாடல், கூடிய கூட்டம், பேசிய பேச்சு, கழித்த நேரம், செய்த செலவு தவறு என உணர்ந்தும் வருங்கால வாழக்கையைத் தீர்மானிக்கத் தயங்குகிறார்கள். என்றாலும் ஒரு சிலர் உணர்ந்து பச்சாத்தாபப்பட்டுத் தமது பாதையைத் திருத்தி புதிய வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றனர். இவர்கள் சொற்பம். இவர்கள் தொகை அதிகமாக வேண்டுமென்பதையே அறிவுலகம் எதிர்பார்க்கின்றது. நாம் மேற் சொன்ன, 'அறிந்தும் தம்மைத் திருத்திக் கொள்ள முடியா வண்ணம் திகைக்கின்ற இளைஞர்' நம்மகத்தில் பெருந்தொகையானோர் இருக்கின்றனர். இவர்களே தீர்மானமற்ற நிலையினராகக் காட்சியளிக்கின்றனர்.

இவர்களே நம்மவர்கள். இவர்கள் இளைஞர்கள். இவர்கள் நாளைக்கு வாழவேண்டும். நாளைய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இவர்கட்குரியது நாளைய வாழ்க்கை. ஆகவே நாளைய வாழ்க்கையைத் தீர்மானிக்கப் பெற்றோரும் பெரியோரும் உதவ வேண்டும். இளைஞரும் தமது தயாள மனத்துடன் பிழைகளைத் திருத்தி, அறிவு, ஆன்மீக வாழ்க்கையில் சிறந்தவர்களாகத் துலங்க வேண்டும்.

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**பெற்றோர் மன்றம்...........**

[9ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றனர் என்றால், உண்மையில் அவர்களிடையே அன்பும் அமைதியான வாழ்க்கையும் நடைபெறுகின்றது என்ற கருத்தல்ல. சமூகக்கோட்பாடுகளினால் கட்டுண்டு இருக்கிறார்கள். ஆனால் துணிவும் பொருளாதாரப் பலமும் இருக்குமானால், இன்று ஒன்றித்து வாழக் காணப்படும் எத்தனையோ குடும்பங்கள் சிதைந்திருக்கும். பலரிடையே பூகம்பமும் நெருப்பும்தான் உள்ளத்தின் அடித்தளத்தில் காணப்படுகின்றன. குடும்பங்களில் பெரும் சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணம், தங்கள் அழைத்தலைப்பற்றிய அறியாமையும் ஆயத்தமின்மையுந்தான். அத்துடன் சிலரிடையே காணப்படும் ஒழுக்கமின்மை, விசேடமாக ஆண்களிடத்தில் காணப்படும் குடிவெறி; இதுவே இலங்கையில் பெரும்பாலான குடும்பங்களின் சிதைவுக்குக் காரணம். மற்றும் சிலரிடையே காணப்படும் பலதாரப் பழக்கம். மனித உயிரை உலகிற்கு அளித்து வளர்க்கும் கடமை மக்களுக்கே உரித்தான பொறுப்பு. இப் பணியை ஆற்றுகையில் தாங்கள் கடவுளின் அன்போடு ஒத்துழைப்பவர்கள், ஒரு விதத்தில் அவ்வன்பிற்குப் பொருள் விளக்கம் தருபவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை குடும்பத்தினர் உணரவேண்டும். ஆகவே, அவர்கள் தங்களின் அலுவலை மனிதனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும், கிறீஸ்தவனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும், செய்ய வேண்டும்.

தாங்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளைத் தக்கமுறையில் வளர்க்க முடியுமா என்பது அவர்கள் மனதிலிருக்க வேண்டும். மணமக்களே இந்த முடிவைச் செய்யவேண்டும். தங்கள் விருப்பப்படி செயல்படமுடியாது, இதனால் படைத்தவரை மாட்சிமைப்படுத்துகின்றார்கள். சுருங்கக் கூறின், பிள்ளைகள் குடும்பத்தில் வேண்டப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ''இம் மைந்தனைப் பெற்றெடுக்க இவன் பெற்றார் என்ன தவம் செய்தனரோ'' என்று கூறக்கூடியிருக்கவேண்டும்.

அதற்கு மாறாக நம் நாட்டில் நடப்பதென்ன? கூடிய தொகையான பிள்ளைகளைப் பேணிவளர்க்கக் கூடிய செல்வந்தர்களுக்குப் பிள்ளைகள் ஒன்றிரண்டு, சமூகத்தில் ஏழைகளெனப்படுவோருக்குப் பிள்ளைச் செல்வம் அதிகம். இச்செல்வங்களை யார் தக்க முறையில் வளர்ப்பார்?

எனவே, மணவாழ்வுக்குரிய செயல்கள் மனிதனின் உண்மை மாண்பிற்கு ஏற்ற வகையில் மிக்க மரியாதையுடன் மதிக்கப்பட வேண்டும். ஆகவே, பொறுப்புணர்ச்சியோடு உயிர் அளிக்கும் அலுவலை மணமக்கள் நடாத்த வேண்டும், மண அன்பிற்கும் ஒழுக்கத்திற்கும் பங்கம் நேரிடாத வகையில். இப் பொறுப்புணர்ச்சியில்லாதபோது, பிள்ளைகள் குடும்பத்தில் வேண்டப்படாதவர்கள், சமூகத்தில் அதிகமாகக் கழிக்கப்பட்டவர்கள் ஆவர். இன்று நம் நாட்டில் நல்ல பொருளாதார நிலையில் இருப்போரே தம் மக்களுக்குத் தக்க கல்வியளிக்க முடியாத நிலையில், பட்டம் பெற்றோரே பதவி இல்லாத நிலையில், இருக்கும்போது, அவர்கள் கதி என்னவாகும்?

(வளரும்)

---

**உனது எதிர்காலம் என்ன?....**

[13ம் பக்கத் தொடர்ச்சி]

தனி மனிதர் நலனுக்காகவும் அவர் உருவாக்கும் குடும்பங்களின் நலனுக்காகவும், குடும்பங்கள் உருவாக்கும் சமுதாயத்துக்காகவும் ஒவ்வொர் நபரும் ஒத்துழைக்க வேண்டும். இளைஞர் தமது வருங்கால வாழ்க்கையை உருவாக்க இன்றே ஆயத்தம் செய்ய வேண்டும். நாளைய நிலை அவர்களது. ஆகவே இன்றே வாழ்க்கைக்கு ஒளியூட்ட ஆயத்தம் செய்வதால் எதிர்காலம் தளம்பாத நிறைகுடமாக இருக்க முடியும்.

அடுத்த இதழில் ''இளைஞரும் நிலையற்ற காதலும்'' பற்றிய பொருளை வாசிக்கத் தவற வேண்டாம்.

அருட்திரு. ஸ்ரன். அருள்குணஞானம்

---

**இயேசு அடியானின் வேண்டுதல்**

அரும் பெருமானே, தாராள மனது
எனக்கு ஊட்டு;
உன் தகைமைக்கு ஏற்ற ஊழியம் ஆற்ற
எனக்கு அறிவையும் ஊட்டு;
செலவைக் கணியாது ஈய
எனக்கு ஈரமும் ஊட்டு;
காயம் கருதாது போரிட
எனக்கு வீரமும் ஊட்டு;
இளைப்பாற்றி தேடாது உழைத்திட
எனக்கு ஊக்கமும் ஊட்டு;
''எனக்கு, உன் ஆணையைப்
புரிவதே போதும்,
கைமாறு வேறு ஏதும் வேண்டாம்,''
எனத் தொண்டாற்றும்
தியாகமும் ஊட்டு;

மூலம்: உலோயோலா ஊர் புனித இன்னாசியார்.
தமிழாக்கம்: ''இலங்கைத் தமிழன்'' மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீ...... உனக்காக அல்ல...

ஐயா!.... ஐயா! மீண்டும் அதே குரல். ஆனால் பதிற் குரல் இன்னும் எழவில்லையே? நிமிடங்கள் நிற்கவில்லை. தொடர்ந்தும் கதவைத் தட்டுகின்றான்.

''சே! மனிதன் இளைப்பாறும் இந்நேரத் திற்கூட விட்டு வைக்காதுகள்........ யாரது?''

ஐயா! என் அப்பாவின் உயிர் ஊசலா டிக்கொண்டிருக்கிறது. தயவுசெய்து வீட் டிற்கு வருகிறீர்களா?

''மணி இரண்டாகிறது.... விடியற் காலையில் நீ இங்கு வா........ அப்போ நான் உன்னுடன்............

''இல்லை ஐயா, காலையில் வந்தால்........ ஒரு வேளை நீங்கள் என் தந்தையை உயிருடன் காணமாட்டீர்கள் என்றுதான் நினைக்கின் றேன். உங்கள் தந்தை இந்நிலையில் இருந் தால், நீங்கள்........

''என்னப்பா? கொஞ்சம்கூட மனிதத் தன்மை இல்லாமல் பேசுகிறாயே. விடிந்தது முதல் உங்களுக்காகத்தானே பாடுபடுகிறோம். சற்று நேசம் சயனிக்க வந்தால், அதுவும் கிட்டாதுபோலிருக்கிறதே?'' முணுமுணுக் கிறார் டாக்ரர் சந்திரன்.

''இல்லை.... இம்முறை வரத்தவறினால்.... நீங்க............

''ஏனப்பா, இந்நகரில் வேறு டாக்ரரே கிடையாதா?''

''ஆம், நீங்கள் அப்படிக்கேட்கலாம். ஆனால் ஏனோ என்னப்பா உங்கள் பெயரைத்தான் முணு முணுத்துக்கொண்டிருக்கின்றார்............ எனவேதான் இங்கு ஓடோடி வந்தேன்........ வரமாட்டீர்களா?

''அடேய்! ஐயா சொல்லும் சொல்லொன் றுக்கும் எதிர்ப்பாட்டுப்பாடுகின்றாயே! உங் கப்பன் உயிர் ஒன்றுக்காக, எத்தனையோ உயிர்களைக் காக்க வேண்டிய இந்த டாக்ர ரின் உயிரையே நீ வாங்கலாமா?....'' மறுபக் கத்தில் இதுவரையும் இவர்களது சம்பாஷ ணையைக் கேட்டுக்கொண்டிருந்த வேணு........ வேலைக்காரன் ஜெயபாலைத் திட்டுகிறான்.

உண்மைதான்! நாளெல்லாம் ஓய்வு ஒழிச்சலின்றி, அங்கே ஆப்ரேஷன், இங்கே சீரியஸ், இன்னும் பிரசவம் போன்ற பற்பல நோயாளிகளுடனும் பாடுபடும் டாக்ரர்........ சில மணிக்கு ஓய்வு எடுக்க விடமாட்டார்கள்; தொடர்ந்து வரும் நோயாளிகளைக் காக்க வேண்டிய பொறுப்புக்கு உலை வைக்கிறான் ஜெயபாலன்.... என்று எண்ணுகிறான் வேணு. உண்மைதான்.... டாக்ரர் நற்சுகமாக இருந் தாற்றானே, ஓடி வருபவரை, குணப்படுத்த முடியும். நாளெல்லாம் உழைத்து அவயங் கள் இனியும் முடியாது என்று குரல் எழுப்ப ஓய்வு நாடி உறங்கக்கூட இந்த உலகம் விடாது போலிருக்கே............

வேலைக்காரன் வேணுவின் வாக்கியம் ஜெயபாலை யோசிக்கத் தூண்டியது; தலை யைத் தொங்கப்போட்ட வண்ணம் போய்க் கொண்டிருக்கின்றான் வீடு நோக்கி.

அங்கே தந்தையோ............ கண்கள் இனி யும் என்னால் இந்த நன்றிகெட்ட உலகைப் பார்க்க முடியாது என்ற வேசத்தால் மூட, உதவி செய்ய இனியும் இயலாது என்ற நோக்குடன் வேலை நிறுத்தம் செய்வது போல் கைகளும், கால்களும் நிலைகுத்திக் குளிர, இரக்கம் என்ற சொல்லே என்னிடம் இனி இல்லாமலிருக்க வேண்டுமானால், அங்கே, இதயம் என்ற ஒன்று இயங்கக்கூடாது என்ற உண்மையை உணர்ந்ததுபோல் இதயத் துடிப்பும் அடங்க, மனிதனின் உத்தரவின்றி எங்ஙனம் உலகிற்கு வந்தமோ, அங்ஙனமே உத்தரவின்றி, உள்ளமும் அடங்கி, சப்த நாடி களும் ஒடுங்க, ஞானிபோல் காட்சி தந்தார்.

## றெ. விலியம்ஸ், திருகோணமலை.

''ஹோ'' என அவன் குளறவில்லை. ஏதோ எதிர்பார்த்த ஒன்று நிறைவேறி விட் டது. இனி நடக்கவேண்டியதைத் தனியாக நடத்தினான். உறவினர் என்ற பட்டப்பெய ரால் பலர் வந்தனர். கடமைக்காக சிலரும், உரிமை என்ற போர்வையில் பலரும் சில சொட்டுக் கண்ணீரைக் கரைத்தனர்.

களைப்புத்திர, டாக்ரர், ஜெயபாலின் வீட்டை விசாரித்து வருகிறார். அயலவர்

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**நீ........ உனக்காக அல்ல....**

[15ம் பக்கத் தொடர்ச்சி]

அநேகரால் சூழப்பட்ட சடலத்தை நோக்கி வருகின்றார்.

ஆனால் .... .... மனிதன் வாழ்நாளில் சில நிகழ்ச்சிகளைத்தான் சந்திக்கக்கூடாது எனத் தீர்மானிப்பது வழக்கம். ஆனால் டாக்ரருக்கு இந்த விபரீத நிகழ்ச்சி ஏற்பட்டு விட்டது.

அன்னையை, அறியாத பருவத்தில் இழந்து, தந்தையின் அன்பையே அறியாதவனாய், பரிதாபமாகக் காணப்பட்டவனை, உயிர் கொடுத்து, வாழ்க்கை வாழ்வதற்கே.... என்ற சிறந்த போதனையை நல்கியதுடன், வாட்டி வதைக்கும் வறுமைப் பிணியையும் ஒழித்து, வாழ்விற்கு வழிகாட்டிய, உயிர் கொடுத்த உத்தமன், உயிர்களைக் காக்கும் உத்தம பணிக்கு ஆளாக்கிய ஆன்மா என் பெயரைக் கேட்ட வண்ணம் உயிர்விட்டதே.... என் கடமை.... பணி செய்வது!

ஓர் இரவு நித்திரைக்காக எனக்கு உயிர் ஈந்தவரையே நிர்க்கதியான மரணத்திற்காளாக்கினேன்.... கண்ணீர்த்துளி இரண்டு கன்னம் வழியே உருண்டு பூமியைத் தொட்ட அதேவேளை, நெஞ்சில் நினைவைத் தொடும் ஓர் தீர்மானம் உருவாகின்றது ........

நீ.... உனக்காக வல்ல.... பல உயிர்களைக் காக்க வேண்டியவன்.... ஒரு உயிருக்காக கஷ்டப்பட்டு நித்திரை விழித்தோடி வர வேண்டுமா?

ஆம்.... பல உயிர்கள்! நீ கஷ்டப்பட்ட போது உதவ ஓடோடி வரவில்லைத்தம்பீ! ஆறுதல் பகர, அந்தப் பலர் வரவில்லை.... இந்த ஒருயிர் மட்டுமே உதவிக்கரம் நீட்டியது.... அன்புப் பாடம் போதித்தது.... வாழ்விற்கு வழி வகுத்தது. ஆனால், நீயோ.... மனச்சாட்சி தடையின்றி உபதேசித்தது....

நடந்தவை கசப்பான கனவாக இருக்கட்டும் என்ற தீர்மானத்தை டாக்டர் எடுக்கவில்லை.... நடப்பவை நல்லவையாக இருக்க, மறக்க முயலும், மறக்க முடியாத முன்னர் பெற்ற கசப்பான உண்மைகள், அனுபவங்கள் என்றும் என் நெஞ்சில் ஒலிக்க, அதன் பேறாக நடக்க வேண்டியவற்றைத் திருத்த வேண்டும் என்ற முடிவுடன், ஜெயபாலுடன் சேர்ந்து இறுதிக்கடன்களை இனிதே முடிக்க விரைகின்றார் டைரக்டர்.

(யாவும் கற்பனை)

# திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம்.

## முக்கிய அறிவித்தல்

**விசாரணைப் பங்குகளின் ரீதியில் செய்யவேண்டிய கருமங்கள்:—**

(அ) பொது நிலையினரின் அப்போஸ்தல பணிக் குழுக்கள்:

1. தங்கள் வருடாந்த அறிக்கைகளை ஆடி 31க்கு முன் பங்குச்சபைச் செயலாளருக்கு அனுப்பவேண்டும். (உபவிதி 7).
2. தங்கள் புது உத்தியோகத்தர்களின் பெயர்களை ஆவணி 15க்கு முன் பங்குக் குரவருக்கு அறிவிக்கவேண்டும் (உபவிதி 5)

(ஆ) பங்குச் சபைகள்:

1. வேலை வருடம் புரட்டாசி 1ல் ஆரம்பமாகி அடுத்த வருடம் ஆவணி 31ல் முடிவடையும் (உபவிதி 4).
2. செலுத்தவேண்டிய கட்டணத்தை ஆவணி 31க்கு முன் பிராந்திய சபைக்கு அனுப்ப வேண்டும் (விதி 25).
3. வருடாந்த அறிக்கையை புரட்டாசி 10க்கு முன் பிராந்திய சபைக்கு அனுப்பவேண்டும் (உபவிதி 8)
4. தங்கள் புது உத்தியோகத்தர்களின் பெயர்களைப் பிராந்திய அத்தியட்சகருக்கு புரட்டாசி 15க்கு முன் அறிவிக்க வேண்டும் (உபவிதி 5). அவைகளைத் 'தொண்டன்' ஆசிரியருக்கும் அறிவிக்கவும்.

(இ) பங்கு ஐக்கிய சங்கம்:

வருடாந்த பொதுக்கூட்டம் ஆவணி மாதக் கடைசி வாரத்தில் நடைபெற வேண்டும் (விதி 39).

**A. W. அரியநாயகம்,** செயலாளர்
லவாந்தர் ஒழுங்கை
தி.ம மே.ஐ. சங்கம்
திருகோணமலை.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். வ. தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு அவர்களால் 5-8-70ல் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media